[2011 ஆகஸ்ட் 19
முற்பகல் 10–45

2. அறிவிப்பு

நல்லிணக்க நாள் உறுதிமொழி நிகழ்ச்சியில் பங்கேற்க பேரவையை ஒத்திவைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "நல்லிணக்க" நாளை முன்னிட்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இன்று (19–8–2011) காலை 11–00 மணிக்கு தலைமைச் செயலகம், பிரதானக் கட்டடத்திற்கு அருகிலுள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் "நல்லிணக்க நாள்" உறுதிமொழியைச் செய்துவைக்க உள்ளார்கள். அந்நிகழ்ச்சியில் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில், பேரவை தற்போது ஒத்திவைக்கப்பெற்று, மீண்டும் 11–15 மணிக்குக் கூடி, எஞ்சிய அலுவல்களை மேற்கொள்ளும். ஆகவே, இப்போது பேரவை ஒத்திவைக்கப்படுகிறது.

பேரவை முற்பகல் 11–15 மணிக்கு மீண்டும் கூடும்.

முற்பகல் 11–15

முற்பகல் 11–15 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட காலிப் பணியிடங்களை நிரப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள மருத்துவர்கள், செவிலியர் உள்ளிட்ட அனைத்து காலிப் பணியிடங்களையும் உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் சி. விஜயபாஸ்கர், திரு. ரா. சரத்குமார் ஆகியோர் சட்டப் பேரவை விதி 55–ன்கீழும், தே.மு.தி.க. கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் சட்டப் பேரவை விதி 55–ன்கீழும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன்,

2011 ஆகஸ்ட் 19] [பேரவைத் தலைவர்]

திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. பெ. மகாலிங்கம் ஆகியோர் சட்டப் பேரவை விதி 55–ன்கீழும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு கே. உலகநாதன், திரு டி. இராமச்சந்திரன், திரு வெ. பொன்னுப்பாண்டி, திரு. கு. லிங்கமுத்து, திரு. பி.எல். சுந்தரம், திரு. எஸ்.பி. முத்துக்குமரன், ஆகியோர் சட்டப் பேரவை விதி 55–ன்கீழும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் சட்டப் பேரவை விதி 55–ன்கீழும் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்பு கொடுத்துள்ளவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாகத் தங்கள் கருத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

முதலில் அ.இ.அ.தி.மு.க. கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள், இருக்கையில் இல்லை. தே.மு.தி.க. கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள். இருக்கையில் இல்லை. இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் வந்துவிட்டார்கள், அவர் பேசிவிடட்டும்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள மருத்துவர்கள் மற்றும் செவிலியர் பணியிடங்களை நிரப்ப ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்துள்ள சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே, உங்கள் கருத்துகளைச் சொல்லலாம்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் காலியாகவுள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட அனைத்து காலிப் பணியிடங்களையும் உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியம்

குறித்து பேச விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியிலே, அரசு மருத்துவமனைகளிலே மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் முறையாக நியமிக்கப்படாமல் நோயாளிகளுக்கு முறையான சிகிச்சை அளிக்க முடியாத நிலை இருந்துவருகின்றது. ஆகையினாலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்ல ஆட்சியிலே, மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களைப் பணி நியமனம் செய்து, நோயாளிகளினுடைய குறைகளைத் தீர்க்குமாறு கூறி அரசினுடைய கவனத்தை ஈர்க்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

***திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து அரசுத் துறைகளில் தோல்வியைக் கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஐந்தாண்டுகால ஆட்சியில், அரசு மருத்துவமனைகளும் அவற்றினுடைய செயல்பாடுகளும் பரிதாபமான நிலைமைக்குத் தள்ளப்பட்டன என்பதை நான் இந்த நேரத்திலே கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் அரசு மருத்துவமனைகளில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து இந்தச் சபையினுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். தமிழ்நாட்டில் சாதனைப் படைத்துவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சியில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளில் உள்ள காலிப் பணியிடங்களில் மருத்துவர்களையும், செவிலியர்களையும் பணியமர்த்த வேண்டுமென வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், தென் மாவட்டத்திற்குத் தலைமையாக உள்ள மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் 600 செவிலியர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 415 பேர்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11—20

அதேபோல, நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புவது, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அரசு விரிவாக்க மருத்துவமனைக்கு வெறும் கட்டடத்தைத்தான் மத்திய அமைச்சர்

2011 ஆகஸ்ட் 19] [திரு. இரா. அண்ணாதுரை]

அழகிரி அவர்கள் திறந்து வைத்தார்கள். ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், அவர்களுடைய உத்தரவின்பேரில் ஆகஸ்டு மாதம் 3 ஆம் தேதி அந்த மதுரை அரசு மருத்துவமனை விரிவாக்கக் கட்டடம் திறக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு குறிப்பிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே நேரத்தில், அந்த விரிவாக்க மருத்துவமனை செயல்பட வேண்டுமென்று சொன்னால், 60 மருத்துவர்கள் உள்ளிட்ட 550 பேர் அங்கு தேவைப்படுகிறார்கள். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, அந்த விரிவாக்க மருத்துவமனையினுடைய செயல்பாட்டிற்கு மத்திய அரசாங்கத்தின் நெடுஞ்சாலைத் துறையிலிருந்து 10 கோடி ரூபாயும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 3 கோடி ரூபாயும் தருவதாக ஒத்துக்கொண்டது. ஆனால், மத்திய அரசிடமிருந்து 10 கோடி ரூபாயையும் பெறவில்லை; திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஒத்துக்கொண்ட 3 கோடி ரூபாயையும் வழங்கவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலையிட்டு, மத்திய அரசாங்கத்தில் நெடுஞ்சாலைத் துறை தரவேண்டிய 10 கோடி ரூபாயையும், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சியில் 3 கோடி ரூபாயையும் வழங்கி, அந்த விரிவாக்க மருத்துவமனையை முழுமையான செயல்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்திலே அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் மருத்துவர் காலிப் பணியிடங்கள் குறித்த முழு விவரங்களையும் சேகரித்து, எல்லா மருத்துவமனைகளிலும் மருத்துவர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

உலகச் சுகாதார நிறுவனம், 250 பேருக்கு ஒரு மருத்துவர் தேவை என்று குறிப்பிடுகிறது. ஆனால், நம்முடைய நாட்டில் 1,345 பேருக்கு ஒரு மருத்துவர் என்ற நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. எனவே, இந்தியாவில் பல்வேறு முன்னுதாரணங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய தமிழகம், இந்தத் துறையிலும் முன்னுதாரணத்தினை ஏற்படுத்துவதற்கு, மாண்புமிகு முதல்வர்

அவர்களுடைய ஆட்சியில் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, தனியார் நர்ஸ்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அண்ணாதுரை, இது மருத்துவமனைகளில் பணியிடங்கள் காலியாக இருப்பது குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பு. அதுகுறித்துப் பேசிவிட்டு நீங்கள் உட்காருங்கள். மானியக் கோரிக்கையில் பேசுவதுபோல 15 நிமிடங்கள் கொடுக்க முடியாது. ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நர்சிங் பள்ளிகளில் படித்த மாணவிகளை, அரசு மருத்துவமனைகளில் பணியமர்த்த வேண்டுமென நீதிமன்ற வழக்கு முடிந்து வழிகாட்டுதல் கிடைத்துள்ளது. ஆகவே, தனியார் நர்சிங் பள்ளிகளில் பயிற்சி முடித்தவர்களுக்குப் பணி நியமனம் தர வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டு, அவையினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.

திரு. எஸ்.பி. முத்துக்குமரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மாவட்டத் தலைநகரங்களில் இருக்கக்கூடிய மருத்துவமனைகள், வட்டத் தலைநகரங்களில் இருக்கக்கூடிய மருத்துவமனைகள் மற்றும் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் மருத்துவர் காலிப் பணியிடங்களைச் சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நிரப்புவதற்கு முன்வராத காரணத்தால், தற்பொழுது மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் பெரிய அளவிலான மருத்துவர் பணியிடங்கள் காலியாக இருந்து வருகின்றன. அதேபோன்று, செவிலியர் மற்றும் மருத்துவமனைகளைத் தூய்மைப்படுத்துவதற்குரிய துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள்கூட நிரப்பப்படாமல், அவல நிலைக்கு உள்ளாக்கி விட்டுவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அதனை நம்முடைய அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்னும் சொல்லப்போனால், வட்டாரத் தலைமை மருத்துவமனைகள், மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில்கூட, விஷக்கடி மற்றும் நாய்க்கடிக்கான மருந்துகள்கூட சென்ற ஆட்சியில்

2011 ஆகஸ்ட் 19] [திரு. எஸ்.பி. முத்துக்குமரன்]

போதிய அளவிற்கு இல்லாத காரணத்தால், அந்தத் தட்டுப்பாட்டின் காரணமாக, பாதிக்கப்பட்ட நோயாளிகள் நீண்ட தூரத்திலிருந்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கு வந்து சேருவதற்குள் பெரிய அளவிலான உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதனையும் கவனத்திலே கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள்மூலமாக, வட்டாரத்திலே இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் உரிய சிகிச்சை செய்ய, தேவையான விஷக்கடி மருந்துகளை வழங்கி, போதிய மருத்துவர்களை நியமித்து அவற்றை நிறைவேற்றித் தரவேண்டும்.

முற்பகல் 11–25

மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் இருக்கக்கூடிய காலியிடங்களை நிரப்புகிறபோது, மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஒரு சிறப்பு மருத்துவர் பணியிடத்திற்கு, சிறப்பு மருத்துவர்களை மட்டுமே அப்பணியிடத்தில் நியமிக்கவேண்டுமே தவிர, வேறு துறைகளிலே உள்ள மருத்துவர்களைப் போட்டு, நாங்கள் காலிப் பணியிடம் இல்லாத அளவிற்கு மருத்துவமனைகளை வைத்திருக்கிறோம் என்ற அளவில் சென்ற ஆட்சியில் வழிகாட்டப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நடைமுறை மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அவற்றையெல்லாம் அரசு கவனத்திலே எடுத்துக்கொண்டு, உடனடியாக அந்தக் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டுமென இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகக் கூறி அரசின் கவனத்தை ஈர்க்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

***திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் மருத்துவத் துறையைச் சரிவர கவனிக்காத காரணத்தினால், சுகாதார நிலையங்களின் முழுமையான சேவைகளைத் தமிழக மக்கள் நிறைவான வகையில் பெற இயலவில்லை என்ற நிலையில்தான் இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பு கொண்டுவரப்பட்டுள்ளது. தமிழகத்தில் 1,589 ஆரம்ப சுகாதார மையங்கள் இருக்கின்றன. 385 ஒன்றியங்களில் upgraded health centres இருக்கின்றன. இவற்றிலெல்லாம் மருத்துவர்கள் நியமிக்கப்படாத சூழ்நிலை இருக்கின்றது. கடந்த ஆட்சியின் முறைகேடான

[திரு. ரா. சரத்குமார்] [2011 ஆகஸ்ட் 19

செயல்களால் அங்கு அவர்கள் நியமிக்கப்படவில்லை. Primary Health Centres மற்றும் upgraded Primary Health Centres, ஆக இரண்டிலும் சேர்த்து 4,252 டாக்டர்கள்தான் பணியாற்றி வருகிறார்கள். எனவே, மேலும் தேவைப்படுகின்ற 897 டாக்டர்களைப் பணியில் அமர்த்திட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேசமயத்தில், துணைச் சுகாதார நிலையங்கள் 8,706 இருக்கின்றன. 6,510 துணைச் சுகாதார நிலையங்களுக்கு மட்டும் கட்டட வசதி இருக்கிறது. மேலும், 2,196 துணைச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டட வசதி இல்லை. அங்கே ஒரு மருத்துவ ஊழியர், Nurse நியமிக்கப்பட வேண்டிய சூழ்நிலையில்தான் 2,196 துணை சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. ஆக, இவற்றையெல்லாம் மனதில் கொண்டு——அங்கு நோயாளிகள் வருகின்றபோது அவர்களுக்கு, அது மாவட்ட மருத்துவமனைகளாக இருந்தாலும் சரி, ஒன்றியங்களில் இருக்கின்ற, தாலுகாக்களில் இருக்கின்ற ஆரம்பச் சுகாதார நிலையங்களாக இருந்தாலும் சரி, அங்கு தண்ணீர் வசதி இல்லை; அங்கு துப்புரவுப் பணியாளர்கள் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். அங்கு இந்தச் சூழ்நிலைகள் நிலவுவதால், தனியார் மருத்துவமனைகள் துவங்கும்போது, நம்முடைய நிதிநிலைமை மற்றும் நிதிப் பற்றாக்குறையை மனதில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அருகில் உள்ள சுகாதார மையங்களைத் தத்து எடுக்க அந்தத் தனியார் மருத்துவமனைகளைக் கேட்டுக்கொள்ளலாம்.

அதேபோல, Software company-கள் எல்லாம் Corporate social responsibility என்ற அடிப்படையிலே அதிக நிதி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் இதுபோன்ற பணிகளுக்குப் பயன்படுத்தி, அவர்களையும் தொண்டு செய்வதற்காகப் பயன்படுத்தினால், இந்தக் காலியிடங்கள் மட்டுமல்ல; மாவட்டங்களில் உள்ள மருத்துவமனைகளில், ஏற்கெனவே தனியார் மருத்துவமனைகளில் 65 வயது வரை அவர்கள் பணியாற்றலாம் என்று விதி இருக்கிறது. ஆகவே, ஓய்வுப் பெற்ற அந்த மருத்துவர்களைக்கூட, சில மருத்துவமனைகளுக்காக நாம் பயன்படுத்தினால், உடனடியாக அந்தப் பணியிடங்களை நிரப்பலாம் என்று சொல்லி அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

2011 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிகரற்ற முதல்வர், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு மருத்துவமனைகள் அனைத்தும் தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக மேம்படுத்தப்பட வேண்டும் என்ற உன்னதமான இலக்கோடும், மருத்துவம் கிராம மக்களை நோக்கி விரைந்து சென்றடைய வேண்டும் என்கின்ற தொலைநோக்குப் பார்வையோடும் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்ல பல நல்வாழ்வுத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அம்மா, நீங்கள் இல்லாமல் தமிழருக்கு வாழ்வில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் இருக்கின்ற திசைநோக்கி கைகூப்பி வணங்குகிறேன். ஏழையெளிய மக்களின் இதய தெய்வமே, மக்களின் நம்பிக்கை நட்சத்திரமே, தமிழகத்தின் விடிவெள்ளியே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோடானு கோடி தொண்டர்களில் ஒருவனாக இருந்த என்னை, சட்டமன்ற உறுப்பினராக்கி, அமைச்சராக்கி, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றப் பேரவையிலே பதிலளிக்க எனக்கு வாய்ப்புத் தந்த உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி என் பதிலுரையைத் தருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள அரசுத் துறைகளில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முக்கியமானதாகும். மருத்துவக் கல்வித் துறை, மருத்துவம் மற்றும் ஊரக நலத் துறை, இந்திய மருத்துவத் துறை, பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை ஆகிய நான்கு முக்கிய பிரிவுகள் மக்கள் நல்வாழ்வுச் சேவைகளை வழங்கி வருகின்றன. மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், மருத்துவமனை அடிப்படைப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் உள்ளிட்ட 91,658 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 1,752 மருத்துவர்கள், 1,291 செவிலியர்கள், 2,957 மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், 5,411 அடிப்படைப் பணியாளர் பணியிடங்கள், 1,408 அமைச்சுப் பணியிடங்கள், 2,870 சுகாதார ஆய்வாளர் பணியிடங்கள் உட்பட

மொத்தம் 15,689 பணியிடங்கள் தற்சமயம் காலியாக உள்ளன. இவை இன்று, நேற்று உருவான காலிப் பணியிடங்கள் அல்ல. கடந்த 5 ஆண்டுகளாகத் தமிழகத்தை ஆண்ட மைனாரிட்டி தி.மு.க. அரசின் மெத்தனத்தன்மையாலும், அலட்சியப் போக்காலும், மக்கள் நல்வாழ்வில் அக்கறையின்மையாலும் ஏற்பட்ட தேக்க நிலையின் விளைவாக உருவானவை.

முற்பகல் 11–30

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதவியேற்றவுடன், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, உடனடித் தீர்வாக, கடந்த 6–6–2011 அன்று மருத்துவர் காலியிடங்களை நிரப்புவதற்கென சிறப்புக் கலந்தாய்வு நடத்தப்பட்டு, 380 சிறப்பு மருத்துவர் பணியிடங்கள் விரைந்து நிரப்பப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இம்மாத இறுதிக்குள் வேலைவாய்ப்புத் துறையின்மூலமாக, 469 மருத்துவர்கள் கலந்தாய்வின்மூலம் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்; (மேசையைத் தட்டும் ஒலி) 139 செவிலியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்; 364 செவிலியர் பணியிடங்களை விரைவில் நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதைப்போல, தனியார் செவிலியர் கல்லூரிகளில் பயிற்சி பெற்ற செவிலியர்களுக்கும் நீதிமன்ற உத்தரவின்படி அரசுப் பணி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவத் துறை செவிலியர் கண்காணிப்பாளர்கள், பதவி உயர்வின்மூலம் 213 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் தேர்வு செய்யப்பட்டு, மருத்துவத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 170 இளநிலை உதவியாளர்களுக்கு உடனடியாக கலந்தாய்வின்மூலம் பணி நியமன ஆணை வழங்கிட துணை இயக்குநர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதுபோன்ற காலியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகளை எடுத்தாலும், காலியிடங்களை நிரப்புவதற்கு நிரந்தரத் தீர்வு இல்லாமல் இருந்தது. தற்போதுள்ள பணி நியமன நடைமுறைகளில், உயிர் காக்கும் பணிகளை மேற்கொள்ளும் மருத்துவர்கள் போன்ற மிக அவசியமான பணியிடங்களை நிரப்புவதுகூட காலதாமதத்திற்கு உள்ளாகிறது. வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலம் பணி நியமனம் செய்யும்போது, ஏற்கெனவே மருத்துவமனை வைத்து நடத்தும் மருத்துவர்கள் நேர்முகத் தேர்விற்குக்கூட வருவதில்லை.

2011 ஆகஸ்ட் 19] [டாக்டர் வி.எஸ். விஜய்]

இப்பிரச்சினையைத் தீர்க்க, தீர்க்கதரிசி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நல்வாழ்வுத் துறைப் பணிகளின் செயல்பாடுகள் குறித்து, 3–7–2011 அன்று விரிவாக ஆய்வு செய்து, மருத்துவத் துறையில் காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதன் காரணிகளைக் கூர்ந்து ஆய்வு செய்து, இந்தியாவிலேயே முதல்முறையாக, "மருத்துவத் துறைப் பணியாளர் தேர்வு வாரியம்" (Medical Recruitment Board) *அமைக்க ஆணையிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தொலைநோக்குப் பார்வையுடன் இந்த நீண்டகாலப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கண்டுள்ளார்கள். இதுபோன்ற ஒரு வாரியம் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் உருவாக்கப்படவில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும், மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் நடைபெறும் அரசில்தான் இந்த வாரியம் அமைக்கப்படவிருக்கிறது என்பதையும் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும் இந்த மருத்துவத் துறைப் பணியாளர் தேர்வு வாரியம், ஓர் உயர்நிலைக் குழுவின் கட்டுப்பாட்டில் செயல்படும் ஒரு அமைப்பாக இருக்கும். இதனால் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அனைத்துப் பணியாளர்கள் பணியிடங்களையும் உடனுக்குடன் காலதாமதமின்றி நிரப்பிட இயலும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒப்புதல் பெறவேண்டிய பதவிகளுக்கு உரிய ஒப்புதல் பெறப்படும். இந்தத் தேர்வு வாரியத்தின்மூலம் நியமிக்கப்படும் மருத்துவர், செவிலியர் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் அதே நிலையத்தில் பணி செய்ய வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இதனால் அடிக்கடி காலிப் பணியிடங்கள் ஏற்படும் நிலை தவிர்க்கப்படும். இந்த வாரியத்தை அமைப்பதன்மூலம் மருத்துவர்கள், செவிலியர்கள் நியமிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், அடிப்படைப் பணியாளர்களும் உடனுக்குடன் நியமிக்கப்பட்டு, மருத்துவமனை வளாகங்களைத் தூய்மையாகப் பராமரிக்க வழிவகுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இராமநாதபுரம், நீலகிரி, நாகப்பட்டினம், திருவண்ணாமலை போன்ற மருத்துவர்கள் பணிபுரியத் தயங்கும் மாவட்டங்களுக்கும் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களை நியமிப்பதால், 100 விழுக்காடு அளவில் பணியாளர்கள் பணிபுரிவதை உறுதிசெய்ய முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மக்கள் நல்வாழ்விற்கு முன்னுரிமை அளித்து, இந்தியாவிற்கே வழிகாட்டும்விதமாகச் செயல்பட்டு வருகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த அவையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–35

4. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை–தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், நேற்றையதினம் நேரம் இன்மையால் அறிவிப்புகளை அவையில் படிக்க இயலவில்லை. இன்று அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியோடு இந்த அறிவிப்புகளை வாசிக்கிறேன். நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினுடைய அறிவிப்புகள்.

1. தென் இந்தியாவின் முக்கியமான வர்த்தக மையங்களில் சென்னையில் உள்ள தியாகராய நகர் ஒன்றாகும். ஆனால், இப்பகுதியில் வாகன நிறுத்த இடங்கள் மிகவும் குறைவாக உள்ளதால், எல்லா குறுக்குத் தெருக்களிலும், வாகனங்கள் நிறுத்தப்பட்டு நெருக்கடி ஏற்படுகிறது. இங்கு குடியிருப்போர் மற்றும் பயணிகளின் இன்னலைப் போக்கும் வகையில் "தியாகராய நகர் மறு புனரமைப்புத்" திட்டத்திற்காக நியமிக்கப்பட்ட கலந்தறிதற்குரியவர்கள், தியாகராய நகர், பனகல் பூங்காவின் முன்